Plot 3 Addl

பொன்மார் ஊராட்சிமன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை – திரு. ஸ்ரீநாராயணன்

ந.க. எண் 07/2023-2024 நாள்: 21.02.2024

பொருள்:- மனைப்பிரிவு – செங்கல்பட்டு மாவட்டம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்- பொன்மார் ஊராட்சி மற்றும் போலச்சேரி கிராமம் **Rajeswari Jenix and Jenix Dev Singh** என்பவரின் மனைஎண்-3, சர்வே எண்கள்.**4/3A1pt, 56/2pt,57/7A,57/7B,57/8Apt,57/10A,57/10B1,57/10C2,57/11,57/12,57/17Apt,57/18A,** 1 ஏக்கர் 52 சென்ட் (அ) 6183.00ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்குதொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது –திட்ட அனுமதி அளித்து

பார்வை -1. **Joint Director / Deputy Director/ Assistant Director, Town and Country planning Department (Planning permission) ROC No. YH3TCDO5/2023/TCP dated 18.12.2023.**

2. தானபத்திர எண். 20830/**2023,** நாள்: 29.11.2023.

3. பொன்மார் ஊராட்சி மன்றத்தீர்மானம் எண். 144 நாள் 19.02.2024.

4. பலவகை வரவு ரசீது எண்: 20907 நாள் 21.02.2024.

****

உத்திரவு

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்-பொன்மார் ஊராட்சி மற்றும் பொன்மார் கிராமத்தில் மற்றும் போலச்சேரி கிராமம் **Rajeswari Jenix and Jenix Dev Singh** என்பவரின் மனைஎண்-**3** சர்வே எண்கள்- **4/3A1pt,56/2pt,57/7A,57/7B,57/8Apt,57/10A,57/10B1,57/10C2,57/11, 57/12,57/17Apt, 57/18A,** 1 ஏக்கர் 52 சென்ட் (அ) 6183.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு, பார்வை-1 ல் காணும் **Joint Director / Deputy Director/ Assistant Director, Town and Country Planning Department (planning Permission)** செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகளின்படி, ம.வ./ந.ஊ.து.இ.(செ.மா) எண்.259/2023 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2-ல் காணும் பொது உபயோகம் (27.75 ச.மீ) மற்றும் **TNEB** (27.93 ச.மீ) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 3-ல் காணும் ஊராட்சி மன்றத்தீர்மானத்தின் அடிப்படையிலும், வளர்ச்சிக்கட்டணம் மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.**Rs-6,83,540/-**ரூபாய் ஆறு லட்சத்து எண்பத்தி மூவாயிரத்து ஐநூற்று நாற்பது மட்டும்) ஊராட்சிக்கு வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டதின் அடிப்படையிலும், கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.
2. மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.
3. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.
4. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.
5. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

S. N 21/02/24

தலைவர்
பொன்மார் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்,

Mr.Rajeswari Jenix and Jenix Dev Singh
No.284/1B,OMR,Dev's Ark,Kottivakkam,
Kanthanchavadi,Chennai – 600 096